[2010 ஏப்ரல் 30

மதுரை, திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள காசி விஸ்வநாதர் கோயிலுக்குக் கம்பிவட ஊர்தி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்:*

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான, மலைமீது அமைந்துள்ள அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்குக் கம்பிவட ஊர்தி அமைக்கத் தற்போது எந்தவித உத்தேசமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. ஸையது கௌஸ் பாஷா, அவையில் இல்லை.*

வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

128—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

***29424—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூரில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவக்க அவசியம் தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.*

2010 ஏப்ரல் 30]

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதியில் அரசினுடைய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி என்பது எதுவும் இல்லாத நிலைமை தொடர்ந்து நீடித்து வருகிறது. ஆகவே, தனியார் பள்ளிகளுக்கு 20 ஆயிரம், 25 ஆயிரம் ரூபாய் அதற்கான கட்டணம் செலுத்திப் படிக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, சாதாரணத் தொழிலாளர்கள், விவசாயக் குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் இவ்வளவு தொகை கட்டி அங்கே அந்தப் பயிற்சிக்குச் செல்வதிலே சிரமம் இருக்கிறது. ஆகவே, அரசு அந்த நிலைமையைக் கவனத்தில் எடுத்து, அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க முன்வருமா என்பதை தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, திருப்பூர் மாவட்டத்திலே, திருமூர்த்தி நகரிலே அரசு ஆசிரியர் கல்வி பயிற்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. ஏறத்தாழ 200 மாணவர்கள் அங்கே பயன்பெறுகிறார்கள். அந்த மாவட்டத்திலே இதுகாறும் ஏறத்தாழ 20 தனியார் சுய நிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இருக்கின்றன. திருப்பூர் தொகுதியிலேயேகூட இரண்டு தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்த மாவட்டத்திலே ஏறத்தாழ 3,000 மாணவர்கள் இப்போது படித்துக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, புதிதாக இப்போதைய நிலையில் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்று அமைப்பது என்கிற அந்த நிலைமை அங்கே எழவில்லை என்றே அரசு கருதுகிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், N.C.T.E. கடந்த 2009 ஜூலை மாதம் 28 ஆம் தேதிக்குப் பிறகு சிறுபான்மை நிறுவனங்கள் தவிர மற்ற நிறுவனங்களுக்கு அந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை நடத்துவதற்கு அனுமதி வழங்குவதில்லை என்ற ஒரு கொள்கை முடிவை அரசு எடுத்திருக்கிறது. எனவே அந்தச் சூழ்நிலையில், அங்கே புதிதாக ஆசிரியர் பயிற்சி நிறுவனம் அமைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

[2010 ஏப்ரல் 30

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதியில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தனியார் பயிற்சிப் பள்ளிகள் இருப்பது உண்மைதான். ஆனால், அங்கே போதுமான இடம் கிடைக்காத நிலை. அப்படி இடம் கிடைத்தாலும், அதிகப்படியான கட்டணம் செலுத்தமுடியாத நிலை இருக்கிற காரணத்தினாலேதான் திருப்பூரிலே அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி என்பது அவசியமான தேவையாக இருக்கிற காரணத்தினால், அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால், உடுமலைப்பேட்டை என்பது மாவட்டத்தினுடைய கடைசிப் பகுதியாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், போதுமான இடமும் கிடைப்பதில்லை. ஆகவே, திருப்பூர், அவினாசி, பல்லடம் இவற்றினுடைய சுற்றுவட்டாரப் பகுதி முழுவதையும் கவனத்திற்கொண்டு அரசு மறுபரிசீலனை செய்து, அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் திருப்பூரிலே துவக்க முன்வர வேண்டும், முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, N.C.T.E. இப்போது அதற்கான ஒப்புதலை அளிப்பதில்லை. எனவேதான், தருமபுரி மாவட்டத்திலேகூட நாங்கள் புதிதாக ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தை உருவாக்கிய பிறகும்கூட அங்கே மாணவர்களைச் சேர்க்க இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏனென்றால், மாணவர்கள் சேர்க்கைக்கு N.C.T.E.யினுடைய ஒப்புதல் தேவை. அவர்கள் அதை ஒரு Policy decision–ஆக எடுத்திருக்கக்கூடிய காரணத்தினால், இப்போது அதற்கும் அனுமதி தரவில்லை. இருந்தாலும், எதிர்காலத்திலே N.C.T.E. தன்னுடைய கொள்கைகளை மாற்றுதலுக்குக் கொண்டு வருகிறபோது, திருப்பூரிலேயும் அமைக்கக்கூடிய சூழல் எழுமானால், அப்போது அதைக்குறித்து அரசு ஆராயலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார்.

திரு. ம. இராஜ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த பெரம்பலூர் மாவட்டத்தில் அரியலூர்

2010 ஏப்ரல் 30]

பகுதியில் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்று நடைபெற்று வருகிறது. தற்சமயம் பெரம்பலூர், அரியலூர் என இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்ட நிலையில், பெரம்பலூர் மாவட்டத்திற்கென ஒரு தனி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் இல்லை. எனவே, பெரம்பலூர் மாவட்டத்திற்கென ஒரு தனி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சி. கோவிந்தசாமி அவர்களுக்கு அளித்த அதே பதிலைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார் அவர்களுக்கும் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் க. நெடுஞ்செழியன், திரு. விடியல் எஸ். சேகர் மற்றும் திரு. ம. குணசேகரன் ஆகிய மூன்று பேரும் ஒரே கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

வனம்

***45898—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**
திரு. விடியல் எஸ். சேகர்:
திரு. ம. குணசேகரன்:

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூமி வெப்பமடைவதைத் தடுக்க, வனப் பகுதிகளை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS